தினமணி

"நாணமேடு வெங்காய விதைக்கு கிராக்கி'

First Published : 22 Jan 2011 01:08:17 AM IST



கடலூர் அருகே உச்சிமேடு கிராமத்தில் பயிரிடப்பட்டுள்ள சின்ன வெங்காயம்.

கடலூர், ஜன. 21: கடலூரில் வெங்காய விதைகள் தயாரிக்கப்பட்டு தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கும் விநியோகம் செய்யப்படுகின்றன.

நாணமேடு வெங்காயம் என்ற உள்ளூர் வகை வெங்காயம் கடலூரை அடுத்த நாணமேடு, உச்சிமேடு, உப்பளவாடி, கண்டக்காடு, தேவனாம்பட்டினம், கிள்ளையை அடுத்த கிராமங்கள் மற்றும் வல்லம்படுகை உள்ளிட்ட கிராமங்களில் பயிரிடப்படுகிறது.

இதன் அளவு சிறிய வெங்காயம், பெல்லாரி வெங்காயம் ஆகியவற்றுக்கு இடைப்பட்ட நிலையில் இருப்பதாலும், குறிப்பிடத்தகுந்த சுவையாலும் நாணமேடு வெங்காயத்துக்கு மக்களிடையே நல்ல வரவேற்பு உள்ளது.

வெங்காயம் பயிரிட்டு 120 நாள்களில் அறுவடைக்கு வரும்.

10 ஆண்டுகளுக்கு முன்பு வரை கடலூர் மாவட்டத்தில் பெரும்பாலும் கடலோர கிராமங்களில் வெங்காயம் 1,000 ஏக்கர் அளவுக்குப் பயிரிடப்பட்டு வந்தது.

ஆனால் நிலத்தடி நீர் உவர் நீராக மாறி வருவதாலும், நோய் தாக்குதல் காரணமாகவும் கடலூர் மாவட்டத்தில் வெங்காயம் பயிரிடும் பரப்பளவு குறைந்து வருகிறது.

எனினும் 25 ஆண்டுகளுக்கு மேலாக வெங்காயம் பயிரிடும் விவசாயிகளும் இங்கு உள்ளனர்.

ஏக்கருக்கு ரூ. 35 ஆயிரம் வரை வருவாய் கிடைக்கும் என்றும் விவசாயிகள் கூறுகிறார்கள். வெங்காயத்துக்கு கிராக்கி அதிகம் இருக்கும் ஆண்டுகளில் ஏக்கருக்கு ரூ. 1 லட்சம் வரைகூட வருவாய் கிடைத்து இருப்பதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

ஆனால் வெங்காய விலையில் உள்ள ஏற்ற இறக்கம் காரணமாக, விவசாயிகள் பலர் தற்போது வெங்காய விதை உற்பத்திக்கு மாறி உள்ளனர்.கடலூரில் உற்பத்தி ஆகும் வெங்காய விதைகளுக்கு கோவை, திருப்பூர், பல்லடம், உடுமலைப்பேட்டை, திண்டுக்கல் பகுதிகளில் நல்ல கிராக்கி இருப்பதாக கடலூர் விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.

மேற்கண்ட பகுதிகளில் நாணமேட்டு வெங்காய விதைகளுக்கு, நல்ல சந்தை வாய்ப்பு உள்ளது. தரமான விதையாக இருந்தால் கிலோ ரூ. 1,000 வரை விலை போகும் என்றும், குறைந்தபட்சம் கிலோ ரூ. 500 நிச்சயம் கிடைக்கும் என்றும் விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.

சாகுபடி குறைவு ஏன்?

இது குறித்து 25 ஆண்டுகளாக வெங்காய விவசாயம் செய்து வரும் நாணமேடு விவசாயி ராஜாராம் கூறுகையில், "கடலூர் பகுதியில் 300 ஏக்கருக்கு மேல் நாணமேடு வெங்காயம் பயிரிடப்பட்டு வந்தது.தற்போது 30 ஏக்கராக குறைந்து விட்டது. காரணம் நிலத்தடி நீர் உவர் நீராக மாறி வருவதுதான். மேலும் கடலூர் பகுதியில் வெங்காயப் பயிரில், நோய் தாக்குதல் அதிகரித்து வருகிறது. இதற்கு மருந்து இல்லை' என்கிறார்கள் வேளாண் அதிகாரிகள்.

இதன் காரணமாக வெங்காய விவசாயிகள் பலர், வெங்காய விதை உற்பத்திக்கு மாறிவிட்டனர். நோய் தாக்குதல் இன்றி தரமான விதை கிடத்தால், கிலோ ரூ. 1,000 வரை விற்பனை செய்ய முடியும்.

ஏக்கருக்கு 300 கிலோ விதை தாராளமாகக் கிடைக்கும். கடலூர் மாவட்டத்தில், ஆண்டுக்கு 3 ஆயிரம் கிலோ வெங்காய விதை உற்பத்தி செய்யப்படுகிறது.நாணமேடு வெங்காய விதைக்கு திண்டுக்கல், கோவை, திருப்பூர், பல்லடம், உடுமலைப்பேட்டை பகுதிகளில் நல்ல வரவேற்பு உள்ளது' என்றார் ராஜாராம்.

தொழில்நுட்ப ஆலோசனை

இது குறித்து கடலூர் வேளாண் துறை தெரிவிக்கும் தகவல்கள்: கடலூர் மாவட்ட கடலோரப் பகுதிகளில் வெங்காய உற்பத்திக்கு நிறைய வாய்ப்பு உள்ளது. ஆனால் நமது விவசாயிகள் பாரம்பரிய முறை விவசாயத்திலேயே உள்ளதால், தரமான வெங்காயம், வெங்காய விதை மற்றும் கூடுதல் உற்பத்திக்கு வாய்ப்பு இல்லாமல் போகிறது.வேளாண் விதை உதவி இயக்குநர் அலுவலகத்தில் வெங்காய விவசாயிகள் முதலில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

வேளாண் துறையில் இருந்து வழங்கப்படும் நவீன தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பெற்று விவசாயம் செய்தால், சான்று பெற்ற வெங்காய விதைகளை விற்பனை செய்தால் கிலோ ரூ. 1,000-க்கு மேல் விலை கிடைக்கும் என்றும் வேளாண் அலுவலர்கள் தெரிவித்தனர்.

**கால்நடைகளைத் தாக்கும் ஒட்டுண்ணிகளை அழிக்க நடவடிக்கை**

First Published : 22 Jan 2011 01:11:18 PM IST

தஞ்சாவூர், ஜன. 21: கால்நடைகளை தாக்கும் அனைத்து ஒட்டுண்ணிகளையும் அழிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றார் கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் ஜெயக்குமார்.

தஞ்சாவூர் மாவட்டம், அற்புதபுரம் கிராமத்தில் வெள்ளிக்கிழமை நடமாடும் கால்நடை ஆய்வுக் கூடத்தைத் தொடக்கிவைத்து அவர் மேலும் பேசியது:

தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தில், முன்னோடித் திட்டமாக கால்நடை பராமரிப்புத் துறை மூலம் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் 5 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்தக் கிராமங்களிலுள்ள அனைத்து கால்நடைகளையும் நோயில்லா கால்நடைகளாக மாற்றும் பணி செயல்படுத்தப்படவுள்ளது.

அனைத்துக் கால்நடைகளுக்கும் நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்குதற்கான அனைத்து வகை தடுப்பூசிகளும் உரிய கால இடைவெளியில் போடப்படும்.

ஒவ்வொரு கால்நடையாக ஆய்வு செய்து, குடல்புழு நீக்கப்படும். சினைப்பிடிக்க தகுதியான பசுக்களுக்கு சினை ஊசி மூலம் கருத்தரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அற்புதபுரம் கிராமத்தில் 321 மாடுகள், 420 ஆடுகள் முழுமையாக பரிசோதனை செய்யப்பட்டு எதிர்ப்பு சக்தி உருவாக்கப்படும் என்றார் ஜெயக்குமார்.

நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்புத் துறை துணை இயக்குநர் அருள்மணி, உதவி இயக்குநர்கள் முகம்மது கனி, கமல்ராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**அதிக மணமுடைய கருவேப்பிலை கன்றுகள் உருவாக்கம்**

First Published : 21 Jan 2011 09:30:37 AM IST

காஞ்சிபுரம், ஜன. 20: காஞ்சிபுரத்தில் விவசாயிகளுக்கு குறைந்த விலையில் வழங்குவதற்காக அதிக மணம் உடைய செங்காம் வகை கருவேப்பிலை கன்றுகள் 1 லட்சம் உருவாக்கப்பட்டுள்ளன.

÷காஞ்சிபுரம் அருகே விச்சந்தாங்கல் பகுதியில் உள்ள தோட்டக்கலைத் துறைக்கு சொந்தமான அரசுப் பண்ணையில் இந்த கருவேப்பிலைக் கன்றுகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த கருவேப்பிலை கன்றுகள் வளர்க்கும் பணிகளை தோட்டக் கலைத்துறை துணை இயக்குநர் எஸ்.கோமதி மற்றும் உதவி இயக்குநர் ஸ்ரீவத்சவா ஆகியோர் அண்மையில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

÷இந்த ஆய்வுக்கு பின் தோட்டக் கலைத்துறை துணை இயக்குநர் எஸ்.கோமதி நிருபர்களிடம் கூறியது:

÷"இங்கு உருவாக்கப்படும் கருவேப்பிலை செங்காம் வகையைச் சேர்ந்தது. இது சாதாரணமாக மற்ற கருவேப்பிலையைவிட அதிக மணம் இருக்கும். விவசாயிகளுக்கு குறைந்த விலையில் இந்த கருவேப்பிலை கன்றுகள் வழங்குவதற்காக நாங்கள் உருவாக்கி வைத்துள்ளோம். இவை நன்றாக விளைந்து நல்ல மகசூல் தரக்கூடியது. மானியம் வழங்கும் திட்டங்கள் மூலம் இந்தக் கருவேப்பிலை கன்றுகள் வழங்கப்படுகின்றன. தனியாக விவசாயிகள் இந்தக் கருவேப்பிலை கன்றுகளை ஒரு கன்றுக்கு ரூ.5 செலுத்தியும் பெற்றுக் கொள்ளலாம்' என்றார்.

## பலா மரம்: கேரள விவசாயக் குழுவினர் பார்வை

First Published : 21 Jan 2011 09:07:12 AM IST

பண்ருட்டி, ஜன. 20: கேரள மாநிலம் கோட்டயத்தைச் சேர்ந்த விவசாயக் குழுவினர் பண்ருட்டி பகுதியில் உள்ள பலாத் தோப்புகளை பார்வையிட்டு விவசாயிகளுடன் வியாழக்கிழமை ஆலோசனை நடத்தினர்.

÷கேரள மாநிலம் கோட்டயம் மாவட்டம் பரனஞானம் கிராமத்தைச் சேர்ந்த கிராமஸ்ரீ விவசாயக் கழக உறுப்பினர்கள் 25 பேர் குழுத் தலைவர் கே.கே.தாமஸ் தலைமையில் பெரியகுளம், திண்டுக்கல், திருச்சி பகுதியில் உள்ள விவசாய பல்கலைக்கழகங்கள் மற்றும் பண்ணைகளை பார்வையிட்டு வியாழக்கிழமை பண்ருட்டிக்கு வந்தனர்.

÷இவர்களை வரவேற்ற கடலூர் விதைச் சான்று உதவி இயக்குநர் பி.ஹரிதாஸ் மாளிகம்பட்டு கிராமத்தில் உள்ள கருணாகரன் பலாத்தோப்புக்கு அழைத்து சென்று பார்வையிட வைத்தார்.

÷பலாப்பழத்தை சாப்பிட்ட கேரள விவசாயக் குழுவினர் நல்ல சுவையுடன் உள்ளதாக கூறினர்.

÷பின்னர் பலா விவசாயிகளிடம் கலந்து உரையாடியவர்கள் பராமரிப்பு தொழில்நுட்பம், சந்தை வாய்ப்பு குறித்து கேட்டறிந்தனர்.

÷பண்ருட்டி பகுதியில் பலா அதிக அளவில் பயிர் செய்கின்றனர். இதன் சுளை, தேன் போன்று சுவையாக உள்ளது. இதனால் நல்ல சந்தை வாய்ப்பு கிடைக்கிறது.

÷மேலும் பழத்துக்காகவே பலா சாகுபடி செய்கின்றனர்.

÷கேரளத்தில் ரப்பர் மரம் காற்றில் சாயாமல் இருக்க வரப்பு ஓரம் பலா மரம் நடப்படும். மழை அதிகம் பெய்வதால் எங்கள் பகுகுயில் விளையும் பழத்தில் சுவை இருக்காது.

÷இதனால் பலா பிஞ்சு, காய், பழம், விதை முதலியவற்றில் இருந்து உலர் பலா, சிப்ஸ், அல்வா, சாக்லெட், கொட்டையில் இருந்து மாவு உள்ளிட்ட மாற்று பொருள்களை தயாரித்து விற்பனை செய்து வருகிறோம்.

÷இவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

÷தற்போது வந்த நோக்கம் பலாவின் தரத்தை உயர்த்தி சுவையை மேம்படுத்துவது, சந்தை வாய்ப்பை கண்டறிவது, சாகுபடித் தொழில் நுணுக்கங்களை கேட்டறிந்து எங்கள் பகுதியில் செயல்படுத்த உள்ளோம் என கூறினர்.

÷பின்னர் பாலூர் விதை ஆராய்ச்சி மையத்துக்கு சென்றவர்கள் மேம்படுத்தப்பட்ட புதிய ரக பலா கன்றுகளை வாங்கி சென்றனர்.

தினமலர்

**வேளாண்மை அறிவியல் நிலையத்தில் கண்காட்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 22,2011,00:33 IST

செங்கல்பட்டு : மறைமலைநகர் அடுத்த காட்டுப்பாக்கத்தில் உள்ள, வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பொங்கல் வார விழா, விவசாயிகளுக்கான கண்காட்சி, கால்நடை மற்றும் மீன் வளத்தில் புதிய உத்திகள் என்ற தலைப்பில் கருத்தரங்கு ஆகியவை நடந்தது.வேளாண்மை அறிவியல் நிலையத் தலைவர் குமரவேல் தலைமை தாங்கினார். தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழக விரிவாக்க கல்வி இயக்குனர் கதிரேசன் பொங்கல் விழாவையும், கண்காட்சியையும் துவக்கி வைத்தார். பின் கருத்தரங்கு கையேடை வெளியிட்டு சிறப்புரையாற்றினார்.நபார்டு வங்கி உதவிப் பொது மேலாளர் தொழில் தொடங்குவோருக்கு வழங்கப்படும் கடனுதவிகள் குறித்து விளக்கினார்.கருத்தரங்கில் பல்கலைக் கழக தொழில் நுட்ப வல்லுனர்கள் ஒருங்கிணைந்த பண்ணை, கறவை மாடுமற்றும் ஆடுகளில் இனப் பெருக்க மேலாண்மை, விஞ்ஞான முறையில் ஆடு வளர்ப்பும், நவீன உத்திகளும், பசுந்தீவன பயிர் மேலாண்மை, மதிப்பூட்டப்பட்ட பால் பொருட்கள் தயாரிப்பு, கோழி, வான்கோழி வளர்ப்பில் புதிய அணுகுமுறைகள், சிவப்பு திலேப்பியா, கெளுத்தி, கொடுவா மீன் வளர்ப்பு, மிதவை கூண்டுகுள் மீன் வளர்ப்பு, கடல் இறால் வளர்ப்பு உட்பட பல்வேறு தலைப்புகளில் கருத்துரை வழங்கினர்.பின்னர் பானையில் பொங்கல் வைத்து படையலிட்டு, உறியடித்து பொங்கல் விழாவைக் கொண்டாடினர்.மீன் மற்றும் வேளாண் விளை பொருட்கள் கண்காட்சியில் இடம் பெற்றிருந்தன.

**தோட்டக்கலைத்துறை மூலம் விவசாயிகளுக்கு இடுபொருட்கள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 22,2011,22:30 IST

சிதம்பரம் : புவனகிரி அருகே அழிச்சிக்குடி கிராமத்தில் தோட்டக்கலைத் துறை மூலம் விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கப்பட்டது. சேர்மன் தனலட்சுமி கலைவாணன் தலைமை தாங்கி இடுபொருட்கள் வழங்கினார். தோட்டக்கலைத் துறை உதவி இயக்குனர் ராஜேந்திரன் முன்னிலை வகித்தார். தோட்டக்கலைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்குண்டான பழச்செடிகள், உரங்கள், பூச்சி மருந்துகள், காய்கறி விதைகள் ஆகியவை விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்கப்பட்டது. சுற்றியுள்ள கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர். விவசாயிகளுக்கு அடை யாள அட்டைகள் வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் பாரி, ராஜாராம் சுரேஷ் மற்றும் வினோத் செய்திருந்தனர்.

**விடுபட்ட விவசாயிகளுக்கு மழை நிவாரணம் : குறைகேட்புக் கூட்டத்தில் டி.ஆர்.ஓ., வாக்குறுதி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 22,2011,02:01 IST

கடலூர் : மழை நிவாரணம் கிடைக்கப் பெறாத விவசாயிகள் மனு கொடுத்தால் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என டி.ஆர்.ஓ., பேசினார். மாவட்ட விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் நேற்று கடலூர் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூடத்தில் டி.ஆர்.ஓ., நடராஜன் தலைமையில் நடந்தது. வேளாண் இணை இயக்குனர் இளங்கோவன், நபார்டு வங்கி மேலாளர் ராஜகோபால் முன்னிலை வகித்தனர். அனைத்து துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

கூட்டத்தில் விவசாயிகள் பேசியதாவது: விஜயகுமார்: வண்டுராயன்பட்டு விதை உற்பத்தி நிலையத்தில் நெல்லில் உள்ள ஈரப்பதத்தை உலர்த்த நவீன கருவி வாங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பொதுப்பணித்துறை பராமரிப்பில் உள்ள பாசன வாய்க்காலில் வனத்துறையினர் தேக்கு மரக்கன்றுகளை நடும் முன் அப்பகுதி விவசாயிகளுடன் ஆலோசனை செய்ய வேண்டும். வெங்கடேசன்: ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு விவசாயிகள் கொண்டு வரும் நெல்லை, வியாபாரிகள் அவர்களுக்குள் கூடிப் பேசி அரசு நிர்ணய விலையை விட குறைவாக நிர்ணயம் செய்வதால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. அரசு நிர்ணயித்த விலைக்கு மேல் வியாபாரிகள் விலை நிர்ணயிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கூட்டுறவு வங்கிகளில் பெறப்படும் பயிர் கடன், கடன் பெற்ற தேதியிலிருந்து கணக்கிட்டு வட்டி வசூலிக்கப்படுகிறது. ஆனால் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் பெற்ற தேதியை

கருத்தில் கொள்ளாமல் மத்திய அரசு அறிவித்துள்ள காரிப் மற்றும் ராபி பருவ அடிப்படையில் கணக்கிட்டு அபராத வட்டி வசூலிக்கப்படுகிறது.

ரவீந்திரன்: டெல்டா பகுதி விவசாயிகள் நெல் பயிரிடுவதால் ஏற்படும் இழப்பை உளுந்து பயிரிட்டு சரிகட்டி வந்தனர். ஆனால் கடந்த மூன்றாண்டுகளாக காலம் தவறி தண்ணீர் திறந்த விடுவதால் உளுந்து பயிரிட முடியாமல் விவசாயிகள் நஷ்டப்படுகின்றனர். உளுந்து தனியாக பயிரிட போதிய ஆலோசனைகள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். காவிரி டெல்டா பாசன பகுதிகளில் நடைபெறும் கட்டுமானப் பணியை தரமாக விரைந்து முடிக்கவும், பணிகளை கண்காணித்திட விவசாயிகள் கொண்ட குழு அமைக்க வேண்டும்.

ராமானுஜம்: வாலாஜா ஏரியை சீரமைக்க என்.எல்.சி., நிர்வாகம் நிதி ஒதுக்கி, 2006ம் ஆண்டு டெண்டர் விடப்பட்டும் இதுவரை பணி நடைபெறவில்லை. தற்போது கான்ட்ராக்டர் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்துள்ளதால் இந்த ஆண்டு விவசாயிகள் பயிரிட மாவட்ட நிர்வாகம் உத்தரவாதம் அளிக்க வேண்டும். கூட்டத்தில், மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு அரசு அறிவித்தபடி பல விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை கிடைக்கவில்லை என பல விவசாயிகள் கூறினர். அதற்கு பதில் அளித்த டி.ஆர்.ஓ., "நிவாரணம் கிடைக்கப் பெறாதவர்கள் மனு கொடுத்தால் பரிசீலித்து நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்' என்றார்.

**விளைநிலத்தில் விலங்குகள் அட்டகாசம்: அகழி வெட்ட வனத்துறையினர் திட்டம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 22,2011,01:31 IST

உடுமலை:உடுமலை அருகே, விளைநிலங்களுக்குள் யானைகள் வருவதை தடுக்கும் வகையில், வனத்துறை சார்பில், அகழி வெட்ட திட்டமிடப்பட்டுள்ளது.உடுமலை அருகே, மேற்குத்தொடர்ச்சி மலை அடிவாரத்தையொட்டி அமைந்துள்ள ஜல்லிபட்டி கொங்குரார் குட்டையில், வன எல்லை அமைந்துள்ளது. இங்குள்ள விவசாயிகள், தென்னை, மா, மானவாரி பயிர்கள் சாகுபடி செய்துள்ளனர். வனத்தில் இருக்கும் யானைகள், அவ்வப்போது விவசாய நிலங்களில் புகுந்து பயிர்களை நாசம் செய்கின்றன.திருமூர்த்தி அணைக்கு நீர் குடிக்க செல்லும் வழியில் இங்கு வரும் யானைகள், மாங்கனிகளை விரும்பி உண்ணுகின்றன. அவ்வப்போது, காட்டுப்பன்றிகளும் பயிர்களை நாசம் செய்கின்றன. வனத்துறை சார்பில், அமைக்கப்பட்ட மின்வேலியால் எந்த பயனும் இல்லாத நிலையே உள்ளது. அனைத்து பகுதிகளிலும் சீராக கம்பிகள் அமைக்காததாலும், கம்பிகள் அமைத்த பகுதிகளில் மேடு பள்ளம், செடி, கொடிகள் வளர்ந்ததாலும், சூரிய மின் வேலிக்கு பயன்படுத்தப்படும் "பேட்டரி' கள் தரமில்லாத காரணத்தாலும், விலங்குகள் பயிர் நாசம் செய்வதை கட்டுப்படுத்த முடியவில்லை.இது குறித்து வனத்துறை அதிகாரிகளிடம் விவசாயிகள்

அடுத்தடுத்து புகார் தெரிவித்தனர். அதன் பயனாக, வனத்துறை சார்பில் வன எல்லையில் அகழி வெட்ட திட்டமிடப்பட்டுள்ளது. "கொங்குரார் குட்டை பகுதியில், இரண்டரை கிலோ மீட்டருக்கு ஐந்து லட்சம் ரூபாய் செலவில் அகழி வெட்டப்படும், விரைவில் பணிகள் துவங்கப்படும்' என்றும், விவசாயிகளிடம் அதிகாரிகள் விவசாயிகளிடம் உறுதியளித்துள்ளனர்.

**பட்டுப்புழு வளர்ப்பு தொழில்நுட்பம் உத்தராஞ்சல் விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 22,2011,01:30 IST

உடுமலை:உடுமலை பகுதியில் பட்டுப்புழு வளர்ப்பு தொழில் நுட்பங்களை பார்வையிட்ட உத்தராஞ்சல் மாநில விவசாயிகள் வியப்படைந்தனர்.மத்திய அரசின் "கிளஸ்டர்' திட்டத்தின் கீழ் உத்தராஞ்சல் மாநில விவசாயிகள் 30 பேர், தமிழகம் வந்துள்ளனர். இவர்கள், உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் வெண்பட்டுக்கூடு வளர்ப்பு குறித்து மூன்று நாள் பயிற்சி பெறுகின்றனர். நேற்று போடிப்பட்டி, மானுப்பட்டி பகுதியில் வெண்பட்டுக்கூடுகள் வளர்ப்பு முறை, இளம்புழு வளர்ப்பு தொழில் நுட்பம் குறித்து பார்வையிட்டனர். அவர்களுக்கு மத்திய பட்டு வாரிய ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மைய விஞ்ஞானி செல்வராஜ், பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குநர் பன்னீர்செல்வம் ஆகியோர் விளக்கம் அளித்தனர்.மல்பெரி தோட்டங்களை பார்வையிட்ட மத்திய பட்டு வாரிய டேராடூன் மண்டல அலுவலக விஞ்ஞானி சுரேந்திரதாஸ் கூறுகையில், ""உடுமலை பகுதியில் ஆண்டுமுழுவதும் வெண்பட்டுக்கூடுகள் வளர்க்க பின்பற்றப்படும் தொழில் நுட்பம் வியப்பளிப்பதாக உள்ளது. உத்தராஞ்சல் மாநிலம் டேராடூன் பகுதியில் விவசாயிகள் ஆண்டிற்கு 2 முறையே வெண்பட்டுக்கூடு வளர்க்கின்றனர். உடுமலை பகுதியில் ஐந்து ஏக்கர் வரை மல்பெரி செடி பயிரிட்டு பெரிய அளவில் புழு வளர்ப்பு மனைகளை அமைத்து ஆண்டு முழுவதும் வெண்பட்டுக்கூடு வளர்க்கின்றனர். தொழிலாளர் தேவையை குறைக்கும் வகையில் பல்வேறு தொழில் நுட்பங்களை இப்பகுதி விவசாயிகள் எளிதாக பின்பற்றுகின்றனர். இளம்புழு வளர்ப்பு போன்ற தொழில்நுட்பங்களை எங்கள் பகுதியிலும் செயல்படுத்தி வெண்பட்டுக்கூடு உற்பத்தியை அதிகரிக்க இந்த களப்பயணம் உதவியாக இருக்கும்," என்றார்.

**மலர்சாகுபடி உயர் தொழில்நுட்ப பயிற்சி: விவசாயிகள் பங்கேற்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 22,2011,23:45 IST

திருச்சி: திருச்சி அருகே அந்தநல்லூர் அருகே எட்டரை, கோப்பு, போதாவூர் கிராமங்களில் மல்லிகை, ரோஜா, செவந்திப்பூ சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்காக எட்டரை சமுதாயக் கூடத்தில் ஆத்மா திட்டத்தின் கீழ் மலர் சாகுபடிக்கு உயர் தொழில்நுட்பம் குறித்து விவசாயிகளுக்கான பயிற்சி நடந்தது.

பஞ்., தலைவர் சுப்ரமணியன் முன்னிலை வகித்தார். பயிற்சியை துவக்கி வைத்த வேளாண் இணை இயக்குனர் சேகர், "மலர் சாகுபடியில் புதிய ரகங்கள் மற்றும் தொழில்நுட்பங்களை கடைபிடித்தால் மட்டுமே அதிக லாபம் பெற முடியும்' என்பதை எடுத்துக்கூறினார். அந்தநல்லூர் வட்டார வேளாண் உதவி இயக்குனர் ராஜேஸ்வரன் ஆத்மா திட்டத்தின் மூலம் அந்தநல்லூர் வட்டாரத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து பேசினார்.

சிறுகமணி வேளாண் அறிவியல் நிலைய இணை பேராசிரியர், "மலர் சாகுபடியில் அதிக மகசூல் எடுக்கும் முறை' பற்றியும், இணை பேராசிரியர் ரவி, "மலர் சாகுபடியில் ஏற்படும் பூச்சி நோய் தாக்குதல் குறித்தும், அதைக்கட்டுப்படுத்தும் முறை' குறித்தும் பேசினர். பயிற்சியில் விவசாயிகள் பலர் பங்கேற்றனர். துணை வேளாண் அலுவலர் வேலாயுதம் நன்றி கூறினார்.

**தனியார் பாக்கெட் பால் விலை கிடு கிடு உயர்வு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 22,2011,02:23 IST

தூத்துக்குடி:தனியார் பாக்கெட் பால் நிறுவனங்கள் எல்லாம் எந்தவித முன்னறிவிப்புமின்றி நேற்று முதல் பால் விலையை அதிரடியாக உயர்த்தியுள்ளது. பாக்கெட் பால் விலை திடீரென உயர்ந்ததைக் கண்டு பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.தமிழகத்தில் அரசின் சார்பில் ஆவின் நிறுவனமும், பல தனியார் பால் கம்பெனிகளும் பாக்கெட் பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனையில் ஈடுபட்டு வருகிறது. ஆவின் நிறுவனம் தங்களுக்கு தேவையான பாலினை பால் கூட்டுறவு உற்பத்தியாளர்கள் சங்கம் மூலம் பெற்று வருகிறது.இதேபோல் தனியார் பால் நிறுவனங்கள் தங்கள் பால் பண்ணைகள் மூலமாகவும், தனியார் பால் உற்பத்தியாளர்களிடமும் இருந்தும் மொத்தமாக பாலினை கொள்முதல் செய்கிறது. இவ்வாறு கொள்முதல் செய்யப்படும் பாலினை பதப்படுத்தி பின்னர் பாக்கெட்டுகளில் பல எடையளவுகளில் அடைத்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

எந்த நேரமும் கிடைக்ககூடிய இந்த பாக்கெட் பால் விற்பனை தற்போது கிராமம் முதல் பெருநகரம் வரை அனைத்து தரப்பு மக்களாலும் வாங்கி பயன்படுத்தப்பட்டு வருகிறது. பால்

உற்பத்தியாளர்களிடம் இருந்து பாலுக்கான கொள்முதல் விலையினை அரசு நிர்ணயம் செய்து வருகிறது. மாட்டு தீவனங்களின் விலை மற்றும் மற்ற பொருட்களின் விலைவாசி உயர்வுக்கு ஏற்ப இந்த கொள்முதல் விலையில் மாற்றம் செய்யப்பட்டு வருகிறது. பால் உற்பத்தியாளர்கள் பால் கொள்முதல் விலையை உயர்த்தக் கோரி போராட்டம் நடத்தியதை தொடர்ந்து எருமை பாலுக்கு 2 ரூபாயும், பசும்பாலுக்கு ஒரு ரூபாயும் அரசு உயர்த்தியது. இதனால் பால் உற்பத்தியாளர்களிடம் இருந்து எருமை பால் லிட்டர் ஒன்றுக்கு 22 ரூபாய்க்கும், பசும் பால் லிட்டர் ஒன்றுக்கு 17 ரூபாய்க்கும் தற்போது கொள்முதல் செய்யப்படுகிறது.

இதேபோன்றே தனியார் பால் நிறுவனங்களும் பாலினை கொள்முதல் செய்கிறது. இவ்வாறு உற்பத்தியாளர்களிடம் இருந்து வாங்கப்பட்ட பால் பல தரங்களில் விற்பனை செய்யப்படுகிறது. இதில் கொழுப்பு நீக்கப்பட்ட பால், கொழுப்புசத்து உள்ள பால், புல்கீரிம் மில் என்ற பெயர்களில் இந்த பால் விற்கப்படுகிறது. கொழுப்பு நீக்கப்பட்ட பாலில் 1.5 கிராம் கொழுப்பும், கொழுப்புள்ள பாலில் 3 கிராம் கொழுப்பும், புல்கீரிம் பாலில் 4.5 கிராம் கொழுப்பு சத்தும் அடங்கி இருக்கும். கொழுப்பு நீக்கப்பட்ட பால் அதிக திரவ அடர்த்தியுடனும், கொழுப்புள்ள பால் சற்று கொட்டியாகவும், புல்கீரிம் பால் கெட்டியாகவும் காணப்படும். கொழுப்பு சத்து அதிகமுள்ள புல்கீரிம் பாலினை அதிக அளவில் டீக்கடைக்காரர்கள் பயன்படுத்துவர். இந்த பாலில் மட்டும் தான் சற்று கூடுதலான அளவில் தண்ணீர் சேர்க்க முடியும் என்பதால் அவர்கள் இதனை விரும்பி பயன்படுத்துகின்றனர்.கொழுப்பு நீக்கப்பட்ட பால் லிட்டர் ஒன்றிக்கு 21 ரூபாய் முதல் 22 ரூபாய்க்கும், கொழுப்புசத்துள்ள பால் லிட்டர் ஒன்றிக்கு 24 ரூபாய் முதல் 26 ரூபாய்க்கும், புல்கீரிம் பால் 28 ரூபாய் முதல் 30 ரூபாய்க்கும் பால் நிறுவனங்கள் மொத்த விற்பனையாளர்களுக்கு விற்பனை செய்தது. இந்த விலையில் இருந்து தங்களுக்கு ஒரு கமிஷன் தொகையை எடுத்துக்கொண்டு சில்லரை விற்பனையாளர்களுக்கு பால் பாக்கெட்டுகளை விற்பனை செய்வர்.

அவர்கள் அதில் இருந்து ஒரு தொகையை உயர்த்தி வீடுகளுக்கும், கடைகளுக்கும் பாக்கெட் பாலினை சப்ளை செய்து வந்தனர். இந்நிலையில் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி நேற்று முதல் அனைத்து தனியார் பால் நிறுவனங்களும் அனைத்து தர பாலுக்கும் லிட்டர் ஒன்றுக்கு ஒரு ரூபாயிலிருந்து 2 ரூபாய் வரை விலையை அதிரடியாக உயர்த்தியுள்ளது. வழக்கம் போல் பால் கடைகளுக்கு பால் பாக்கெட் வாங்க வந்த பொதுமக்கள் திடீர் பால் விலை உயர்வை கேட்டு அதிர்ச்சி அடைந்தாலும், வேறுவழியின்றி பால் வாங்கிச் சென்றனர்.இது குறித்து பால் மொத்த

வியாபாரி ஒருவரிடம் கேட்டபோது, கடந்த சில நாட்களுக்கு முன்பு பால் கொள்முதல் விலையை அரசு உயர்த்தியது. இதனால் தான் பால் பாக்கெட் விலையை திடீரென உயர்த்தியுள்ளதாக தனியார் பால் நிறுவனங்கள் எங்களிடம் தெரிவித்துள்ளது. உற்பத்தியாளர்களிடம் இருந்து வாங்கிய பாலில் இருந்து கொழுப்பு சத்தினை நீக்கி அதில் இருந்து வெண்ணெய் போன்றவற்றை எல்லாம் எடுத்துவிட்டு தான் தனியார் பால் நிறுவனங்கள் விற்பனை செய்து வருகிறது.

பால் கொள்முதல் விலை உயர்வால் தனியார் பால் நிறுவனங்களுக்கு பெரிய அளவில் ஒன்றும் இழப்பு ஏற்படப் போவதில்லை.6 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட கால்லிட்டர் பால் நேற்று முதல் 7 ரூபாயாக கூடியுள்ளது. இந்த திடீர் விலை உயர்வை கேட்டு பொதுமக்கள் எங்களிடம் சண்டையிட்டு வருகின்றனர். வரும் 4ம் தேதி பால் உற்பத்தியாளர்கள் கொள்முதல் விலையை உயர்த்தக்கோரி போராட்டம் நடத்த உள்ளனர். தேர்தல் நெருங்கும் சமயம் என்பதால் ஒருவேளை அரசாங்கம் பால் விலையை உயர்த்தினால் பாக்கெட் பால் விலை லிட்டர் ஒன்றிக்கு 40 ரூபாய் வரை நிச்சயம் சென்றுவிடும் என்றார்.

**நுண்நீர் பாசனம் அதிகாரி ஆய்வு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 22,2011,21:33 IST

வடமதுரை : வடமதுரை வேல்வார்க்கோட்டையில் 10 ஏக்கரில் அமைக்கப்பட்டுள்ள நுண் நீர் பாசன திட்டத்தினை அரசின் முதன்மை செயலாளர் திருலோக சுந்தர் ஆய்வு செய்தார்.
நுண்நீர் பாசன அமைப்பின் மூலம் 50 சதவிகித நீர் சேமிப்பும், 30 சதவிகித உர சேமிப்புக்கும் கிடைக்கும் என விவசாயிகள் தெரிவித்தனர். ஆய்வின்போது தோட்டக்கலை துணை இயக்குனர் சந்திரசேகரன், திட்ட அலுவலர் அருள்மணி, தோட்டக்கலை உதவி இயக்குனர் செல்வராஜ் உடன் இருந்தனர்.

**பால் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 22,2011,23:54 IST

பெரம்பலூர்: "பெரம்பலூர் மாவட்டத்தில் அதிக அளவில் பால் உற்பத்தியை பெருக்குவதற்கு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும்' என ஆவின் பால்வளத்துறை கமிஷனர் அபூர்வவர்மா வேண்டுகோள் விடுத்தார்.

பெரம்பலூர் கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க தனி அலுவலர்களுக்கான ஆய்வுக்கூட்டம் ஆவின் பால்வளத்துறை கமிஷனர் அபூர்வவர்மா தலைமையில் நடந்தது. கலெக்டர் விஜயகுமார் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில், ஆவின் பால்வளத்துறை கமிஷனர் அபூர்வவர்மா பேசியதாவது: பெரம்பலூர் மாவட்டத்தில் பால் உற்பத்தியை அதிகரித்து தரமான தூய பால் உற்பத்தி செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை அனைத்து கூட்டுறவு சங்க அலுவலர்களும் மேற்கொள்ள வேண்டும். உற்பத்தியாளர்களுக்க உரிய நேரத்தில் பால் பணம் பட்டுவாடா செய்யப்பட வேண்டும். அதிகளவில் புதிய சங்கங்களை உருவாக்கி பால் உற்பத்தியை அதிகப்படுத்தி கொள்ள வேண்டும். எந்த காரணத்திற்காக சில சங்கங்கள் செயலழிந்து உள்ளதோ அந்த காரணத்தை கண்டறிந்து அச்சங்களுக்கு புத்துயிர் ஊட்ட வேண்டும். அதை நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும். அப்போதுதான் நாம் அதிக அளவில் பால் உற்பத்தியை பெருக்க முடியும். இவ்வாறு அவர் பேசினார்.

முன்னதாக சிறுவாச்சூர், திருப்பட்டூர் ஆகிய பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு நேரில் சென்று திடீர் ஆய்வு செய்தார். அப்போது சங்க உறுப்பினர்களின் குறைகளை கேட்டறிந்து அதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

பால் உற்பத்தியை பெருக்க தாது உப்புக்கலவை மற்றும் உயர்வகை ஊட்டச்சத்து ஆகியவற்றை மாடுகளுக்கு வழங்கிட ஆலோசனை வழங்கினார். தொடர்ந்து பால் குளிரூட்டும் நிலையத்தில் பெரம்பலூர் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் பால் மற்றும் பால் பொருட்களின் தேவையை பூர்த்தி செய்ய மாவட்ட கலெக்டர் விஜயகுமார் முன்னிலையில் ஆவின் பாலகத்தை திறந்து வைத்தார். இதனடிப்படையில் பாலகத்தில் சுடு பால், நெய், பால் கோவா ஆகியவற்றின் விற்பனையையும் துவக்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் டி.ஆர்.ஓ., பழனிசாமி, துணை பால்வளத்துறை ஆணையர் ரவிக்குமார், திருச்சி ஆவின் பொது மேலாளர் விழிநாதன், உதவி பொது மேலாளர் காமராஜ், பி.ஆர்.ஓ., கண்ணதாசன், டாக்டர் அன்பழகன் உட்பட பலர் பங்கேற்றனர்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 22,2011,23:59 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும் 29ம் தேதி நடக்கிறது.

கலெக்டர் அருண்ராய் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும் 29ம் தேதி சனிக்கிழமை காலை 11 மணிக்கு கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடக்கிறது. கலெக்டர் அருண்ராய் தலைமை வகிக்கிறார். கூட்டத்தில் அனைத்து விவசாயிகளும் கலந்து கொண்டு தங்கள் குறைகளை தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ளலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**மழையால் பாதித்த பயிர்களுக்கு நிவாரண நிதி ஒதுக்கீடு: கலெக்டர்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 21,2011,22:04 IST

உடுமலை: திருப்பூர் மாவட்டத்தில், வடகிழக்கு பருவமழையால் பாதிக்கப்பட்ட விவசாய பயிர்களுக்கு நிவாரணம் மற்றும் ரோடு சீரமைப்பு பணிகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட கலெக்டர் சமயமூர்த்தி தெரிவித்துள்ளார்.இது குறித்து கலெக்டர் அறிக்கை:திருப்பூர் மாவட்டத்தில், வடகிழக்கு பருவமழை காரணமாக பல தாலுகாவில் பயிர் சாகுபடி வெகுவாக பாதிக்கப்பட்டது. பயிர் சேதத்தை வருவாய்துறை, வேளாண்துறை, மற்றும் தோட்டக்கலைத்துறையினர் புலவாரியாக தணிக்கை செய்து அறிக்கை அளித்தனர். மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு சம்பந்தப்பட்ட பட்டாதாரர்களுக்கு சென்னை முதன்மை செயலர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரால் 58 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பட்டாதாரர் வாரியாக நிவாரண தொகை வழங்க கோவை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தனி அலுவலருக்கு 22 லட்சத்து 10 ஆயிரம் மற்றும் ஈரோடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தனி அலுவலருக்கு 35 லட்சத்து 90 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட தாலுகாக்களில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தங்களது பகுதிக்குண்டான தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் வங்கி தனி அலுவலரை தொடர்பு கொண்டு தங்களது சேமிப்பு கணக்கு புத்தகத்தில் நிவாரண தொகை வரவு வைக்கப்பட வேண்டும்.தொடர் மழையினால், மாவட்டத்தில் சேதமடைந்த நெடுஞ்சாலைத்துறை ரோடுகளுக்கு பராமரிப்பு பணிகளுக்காக அரசினால் 150 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள்

மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஊராட்சி சாலைகளின் பராமரிப்பு பணிகளுக்காக 30 லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் துவங்கியுள்ளது, இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கால்நடை வளர்ப்போருக்கு அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 21,2011,22:05 IST

உடுமலை:"கால்நடைகளுக்கு வாய் சப்பை பரவாமல் இருக்க ஆறு மாதங்களுக்கு ஒரு முறை கட்டாயம் தடுப்பூசி போட வேண்டும்' என விவசாயிகள் கலந்தாய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.உடுமலை அருகே குறிச்சிக்கோட்டை கால்நடை மருந்தகத்தில் நீர் வள நில வள திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான மூன்று நாள் பயிற்சி முகாம் நடந்தது. முகாமை கால்நடை துறை உதவி இயக்குநர் சோமசுந்தரம் துவக்கி வைத்தார். பயிற்சி முகாமில், தீவனப்புல் வளர்ப்பு, நோய் தடுப்பு முறைகள், கன்று வளர்ப்பு, பால் உற்பத்தியை அதிகரிக்க பின்பற்ற வேண்டிய வழிமுறைகள், மலடு நீக்க சிகிச்சை உட்பட பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டன. மானியத்தில், மக்காச்சோள விதைகள் வழங்கப்பட்டன.முகாமில் பயிற்சி அளித்த டாக்டர் சாயிராபானு பேசுகையில், வாய் சப்பை நோய் தாக்குதலை கட்டுப்படுத்த உடுமலை பகுதியில் தொடர் தடுப்பூசி முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இதில் பங்கேற்காத கால்நடை வளர்ப்போர் அருகிலுள்ள கால்நடை கிளை நிலையத்தில் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட முன்வர வேண்டும்.ஆறு மாதங்களுக்கு ஒரு முறை தடுப்பூசி போடுவது கட்டாயம். கன்றுகளுக்கு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை குடற்புழு நீக்கம் செய்ய வேண்டும். கிடாரி கன்றுகளுக்கு தாது உப்பு கலவையை தவறாமல் அளிக்க வேண்டும் என்றார்.கால்நடை வளர்ப்பு குறித்த வீடியோ காட்சிகள் ஒளிபரப்பப்பட்டு, விவசாயிகள் கேள்விகளுக்கு டாக்டர் சதீஷ்குமார் விளக்கமளித்தார். பாசன சங்க தலைவர்கள், வாசுதேவராம்குமார் காளிமுத்து, கால்நடை ஆய்வாளர் அப்துல் கலாம், பராமரிப்பு உதவியாளர்கள் பாலசுப்ரமணியம், பழனிச்சாமி, குறிச்சிக்கோட்டை, ஆலாம்பாளையம் மற்றும் சுற்றுப்பகுதி விவசாயிகள் பங்கேற்றனர்.

**வரத்து துவங்கியதால் தக்காளி விலை குறைந்தது**

பதிவு செய்த நாள் : ஜனவரி 21,2011,22:02 IST

திருப்பூர்: உள்ளூர் தக்காளி வரத்து துவங்கியதால், விலை கூடைக்கு 50 ரூபாய் குறைந்து, 100 ரூபாய்க்கு விற்கப்படுகிறது; சில்லறையில் கிலோ 26 ரூபாயாக உள்ளது. தென்னம்பாளையம் மார்க்கெட்டில், கடந்த வாரம் ஐந்து கிலோ கொண்ட தக்காளி கூடை 150 ரூபாய்க்கு விற்பனையா னது. தற்போது, உள்ளூர் தக்காளி வரத்து அதிகமான தால், கூடைக்கு 50 ரூபாய் குறைந்துள்ளது. பொங் கலூர், தாராபுரம், புளியம் பட்டி, அனுப்பட்டி, பல் லடம், கிரிச்சிபாளையம், சுல்தான்பேட்டை, கிரிச்சி வளையம், கள்ளக்கிணறு, வடுகபாளையம், மாதப் பூர் உள்ளிட்ட ஊர்களில் இருந்து வரத்து துவங்கியுள் ளது. வரும் நாட்களில் தக் காளி வரத்து மேலும் அதி கரிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. வியாபாரிகள் கூறுகை யில், "உள்ளூர் தக்காளி வரத்து துவங்கியுள்ளதால் வரும் நாட்களில் மேலும் விலை குறையும். கடந்த வாரத்தைவிட, தக்காளி கூடைக்கு 50 ரூபாய் குறைந்துள்ளது. பொங்கல் முடிந்து, தற்போது தான் காய்கறி விற்பனை சற்று சூடுபிடிக்க ஆரம்பித் துள்ளது,' என்றனர்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 21,2011,22:03 IST

உடுமலை:கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் 28 ம் தேதி நடக்கிறது.கோட்டாட்சியர் சோமசேகரன் அறிக்கை: உடுமலை வருவாய் கோட்ட அளவிலான விவசாயிகள் குறை தீர் கூட்டம் வரும் 28 ம் தேதி காலை 11.00 மணிக்கு உடுமலை தாலுகா அலுவலகத்தில் நடக்கிறது. அரசு துறைகள் சார்ந்த கோரிக்கைகளை விவசாயிகள் கூட்டத்தில் தெரிவித்து பயன்பெறலாம். கடந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட பொருள்களில் துறை தொடர்பான அறிக்கை நிலுவை இருந்தால் பதிலை உடனடியாக அனுப்பி வைக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.